**தலைப்பு – 318 - ஊவா மாகாண சபை தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2014 ஆம் ஆண்டு**

---

## 1. தூரநோக்கு, செயற்பணி மற்றும் பிரதான தொழிற்பாடுகள்

### 1.1 தூநோக்கு

ஊவாவானது சவால்களிலிருந்து சாதனைகளை நோக்கி.

### 1.2 செயற்பணி

ஊவா மாகாணத்திற்குள் காணப்படுகின்ற மற்றும் வெளியிலிருந்து பெறப்படுகின்ற வரையறுக்கப்பட்ட வளங்களையும் அனுகூலமான வழிகளில் பயன்படுத்தி ஊவா மாகாண மக்களின் பொருளாதார, சமூக, பௌதீக மற்றும் உளவியல் அபிவிருத்தி என்பவற்றை ஏற்படுத்துவதன் மூலம் ஊவா மாகாணத்தில் வசிக்கின்ற மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தல், பரஸ்பர நம்பிக்கை மற்றும் சமாதானத்தை முன்னேற்றுவதும் தரத்தை உயர்த்துவதும் ஊவா மாகாண சபையின் செயற்பணியாகும்.

### 1.3 பிரதான செயற்பாடுகள்

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் மற்றும் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகள் என்பவற்றின் பிரகாரம் கடமைகள் மற்றும் தொழிற்பாடுகளை நிறைவேற்றுதல்

## 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

**மொத்த ஏற்பாடுகளும் செலவினமும்**

ஊவா மாகாண சபைக்காக மேற்கொள்ளப்பட்ட மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 19,380,202,600 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரை இதில் ரூபா 16,432,566,145 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க ரூபா 2,947,636,455 தொகை அதாவது தேறிய நிதி ஏற்பாட்டில் 15 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| செலவினம் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு<br>தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புகள் | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | |
| மீண்டுவருபவை | 14,744,152,000 | 12,500,152,000 | 2,244,000,000 | 15 |
| மூலதனம் | 4,636,050,000 | 3,932,414,145 | 703,636,455 | 15 |
| மொத்தம் | 19,380,202,600 | 16,432,566,145 | 2,947,636,455 | 15 |

மத்திய அரசாங்கத்தால் வழங்கப்பட்டிருந்த ஏற்பாடுகள் மாகாண சபை நிதியத்தின் கீழ் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் மாகாண சபை நிதியத்தின் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை காலக் கிரமத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும்.